# திராவிட மாடல் அரசின் மகளிர் விடியல் பயணம் திட்டம் - 5ஆம் ஆண்டு தொடக்கம்!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பேருந்தில் பயணித்து பெண் பயணிகளிடம் உரையாடிய காட்சி!






தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிடமாடல் அரசு பொறுப்பேற்று நான்காண்டுகள் நிறைவடைந்து, ஐந்தாம் ஆண்டு தொடக்கவிழாவை முன்னிட்டு, நேற்று முன்தினம் (7.5.2025) சென்னை தீவுத்திடலில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் சார்பில், 214 புதிய பேருந்துகளின் சேவையை கொடியசைத்து தொடங்கி வைத்து, அப்பேருந்துகளை பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர். பாலு, ஆ.ராசா, தயாநிதி மாறன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, போக்குவரத்துக் கழகங்களின் மேலாண் இயக்குநர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.







தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.5.2025) சென்னை வள்ளலார் நகரிலிருந்து விவேகானந்தர் இல்லம் வரை செல்லும் 32B பேருந்தில் அரசினர் தோட்டம் ஓமந்தூரார் பேருந்து நிறுத்தத்திலிருந்து பயணம் செய்து, பேருந்தில் பயணம் செய்த பெண் பயணிகளிடம் உரையாடினார். உடன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆகியோர் உள்ளனர்.